DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 389/2019 DW : 1

Name : ஈஸ்வரி Age – 40

W/o. : முனுசாமி Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

Date:02.03.2026

__வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி__

1) பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் நான் பாகப்பிரிவினை நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை விஜயகுமார், பொன்னன், கே.முனுசாமி, இ.முனுசாமி ஆகியோர்கள் இடையே ஏற்பட்ட பாகப்பிரினை சம்மந்தமான வில்லங்க சான்று ஆகும். அந்த பாகப்பிரிவினை முருகன் பெயர் இல்லை என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் என் மாமானார் ஏழுமலையுடைய பெற்றோர்கள் சம்பாதித்த சொத்துக்கள் ஆகும். அந்த பாகப்பிரினையில் குப்புசாமி பிள்ளைகளும், ஏழுமலையின் பிள்ளை ஏற்படுத்தியது என்றால் சரிதான். குப்புசாமியின் மகன் முருகன் பெயர் இல்லை என்றால் சரிதான். கூர் சீட்டில் அவர் பெயர் உள்ளது. பி.வா.சா.ஆ.5 குறிப்பிடப்பட்டுள்ள பாகப்பிரிவினை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். முருகன் என்பவரை விட்டுவிட்டு ஏற்பட்ட பாகப்பிரினை செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

2) பி.வா.சா.ஆ.10, 11 ஆவணங்கள் ஏழுமலைரெட்டி பெயரில் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.12 முதல் 15 ஆவணங்கள் வீடு வரி சம்மந்தப்பட்ட அவணங்கள் என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் என் மாமனார் என் மாமியார் பெயரில் தான் உள்ளது. அதில் குப்புசாமி பெயரோ அவருடைய வாரிசுதாரர்கள்

பெயர் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.17 ஆவணத்தில் 17.10.1959 ஆண்டு சர்வே எண்.114/16–ல் என் மாமனார் ஏழுமலை கிரையம் வாங்கி அவர் அண்ணன் குப்புசாமி பெயரில் எழுதியுள்ளார். இந்த விவரத்தை பதிலுரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.17–ன் மொழிப்பெயர்ப்பு ஆவணம் முழுமையான ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. பி.வா.சா.ஆ.19 தகவல் அறியும் கீழ் பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த புகாரில் 3ம் பக்கத்தில் குப்புசாமிரெட்டீ மற்றும் ஏழுமலை ரெட்டி ஒன்றாக கிரையம் வாங்கியதாகவும் காலபோக்கில் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். அவர்கள் வாய்மொழியாக பிரித்துக்கொண்டார்களா அல்லது எழுத்து மூலமாக பிரித்துக்கொண்டார்களா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சொத்துக்கள் பிரிக்கப்பட்டதாக என்னுடைய பதிலுரையிலோ அல்லது வாக்குமூலத்திலோ எந்த விவரம் சொல்லாமல் தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது தான் ஆவணமாக அந்த சொத்துகள் பிரிக்கப்பட்டு பத்திர பதிவு செய்யப்பட்டது.

3) 1999ம் ஆண்டு கூர் சீட்டின் மூலமாக பிரித்துக்கொண்டார்கள். அந்த கூர் சீட்டின் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 2001ம் ஆண்டு பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டார்கள். பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டதால் மறுபடியும் பாகப்பிரிக்க அவசியம் இல்லை என்றால் சரிதான். என்ன என்ன சொத்துக்கள் பாகப்பிரிக்கப்பட்டுள்ளது என்பது சொல்லவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.114/16 என் மாமனார் பெயரில் உள்ளது என்றால் அதன் பட்டா எண்.48 என்றால் சரிதான். சர்வே எண்.97/8–ல் 65 சென்ட் நிலம் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது என் மாமனார் அவர் தனியாக கிரையம் வாங்கினார். அந்த கிரையம் வாங்கிய சம்மந்தமாக எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஏழுமலைரெட்டி பெயரில் நிலமும், மனை உள்ளது என்றாலும், குப்புசாமி பெயரில் தனியாக நிலமும், மனை உள்ளதால் அவரவர்கள் தனிதனியாக அனுபவித்து உள்ளதால் தாவா சொத்தில்

எங்களுக்கு எந்த வித உரிமை இல்லை என்றால் சரியல்ல. வாதியின் நிலம் எங்கள் நிலத்திற்கு முன்னால் உள்ளது. எங்கள் நிலம் அதற்கு பின்புறம் உள்ளது. நாங்கள் குடியிருக்கும் இடம் வடக்கு பக்கம் உள்ளது வாதியின் இடம் தெற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். வாதி எங்கள் இரண்டு நிலத்திற்கு கல் போட்டு பென்சிங் போட்டு இருந்தார் என்றால் சரிதான். எங்கள் மனைக்கும் வாதியின் மனைக்கும் நடுவே ஒரு குலதெய்வம் கோவில் உள்ளது, பக்கத்தில் கிணறு இல்லை. போர் தான் உள்ளது. இரண்டு மனைகளும் பிரிக்ககூடிய இடத்தின் வாதியின் மனை ஒட்டி உள்ளது. அதற்கு தென்புறத்தில் வாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். கிழபுறமாக வாதியின் இன்னோரு வீடு உள்ளது என்றால் சரிதான் அதற்கு பக்கத்தில் பாத்ரூம் உள்ளது என்றால் சரிதான். அந்த பென்சிங்யை நாங்கள எடுத்துவிட்டதால் எங்களுக்கு பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்குபக்கம் 114/16–ல் 7 சென்ட் மனை என் மாமனார் கிரையம் வாங்கியது என்றால் சரிதான். சர்வே எண்.114/19ஏ, மற்றும் 19பி ஆகியவை வாதிக்கு உரியது என்றால் சரியல்ல. நான் தங்கியிருக்கும் இடம் அனுமதிக்கப்பட்டு நான் தங்கியுள்ள இடம் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்திற்கு தங்குவதற்கு முன்பு ஏற்கனவே நான் வேறு இடத்தில் குடியிருந்து அதற்குரிய வரி ரசீதை தான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.